தஞ்சை பழைய டெல்டா மிராசுதார்கள்,
நிலச்சுவான்தார்கள் சங்கம்.

கவர்ன்மெண்டாருக்கு ஊடு சாகுபடி வகையரு

G. O-விற்கு ஆக்ஷேபனைகளைத் தெரிவிக்கும்

விண்ணப்பம்.

"யதார்த்தவசனி" பிரஸ்,

கும்பகோணம்.

1933.

இருபோகம், துபஸல்,

தென்னை வகையறு, ஊடுசாகு

படி சம்பந்தமாய் சென்னைக் கவர்ன்மெண்டாரால்

செய்யப்பட்டிருக்கும் 15—3—33-ந்தேதியுள்ள

G. O. நெ. 474 உத்தரவு விஷயமாய்

தஞ்சை பழைய டெல்டா மிராசுதார்கள்,

நில்ச்சுவான்தார்கள்சங்கம்

கவர்ன்மெண்டாருக்கு ஸமர்ப்பிவித்த

விண்ணப்பம்.

1. ஷ 474-நெ. ஜீ. ஓ-வின் விபரமாவது :—

12—12—22வயுள்ள 2219-நெ. ரெவினியூ உத்தரவினால் அங்கீகரிக்கப்பட்ட தஞ்சைஜில்லா மறு செட்டில்மெண்டு விளம்பரத்தின் 18 (b) பாராவில் கண்டபடி தஞ்சை ஜில்லாவில் ஒருபோக சாகுபடியாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ரயத்துவாரி நிலங்களின் காவிரிஜலம் பாசனத்திற்காக அடியில்கண்ட வரிகள் 1—7—1934 முதல் அமுலுக்கு வரும்படியாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

(i) ஒரே பசலியில் முதல்போகம் சாகுபடி மகசூல் அருவடையானபிறகு இரண்டாவது மகசூல் ஒருபோக பயிரானாலும், துபஸலானாலும், பயிர் அதன் பாய்ச்சலுக்கு ஏக்கர் 1-க்கு ரூபாய் 7—8—0.

(ii) பாய்ச்சப்பட்ட முதல்போக துபஸல் பயிர்களுக்கு நஞ்சைத் தீர்வையைத் தவிர ஏக்கர் 1-க்கு ரூ 7—8—0.

அர்த்தம்.—(Definition) துபஸல் பயிர் என்பது கரும்பு, வெற்றிலை, மஞ்சள் ஆகிய இவைகளைப்போல் சாதாரணமாய் ஆறு மாதத்திற்கு மேற்பட்டு நிலத்திலிருக்கும் பயிர் துபஸல் பயிராகும்.

விவரணம் 1.—சாதாரணமாய் ஆறுமாதத்திற்கு மேற்பட்டு தண்ணீர் பாய்ச்சப்படும் தென்னை முதலிய மரங்கள் துபஸல் பயிர்களாகும். மூன்று வருஷங்களுக்கு மேற்பட்ட தென்னைமரங்களுக்குத் தண்ணீர் பூமியில் கசிவதுமூலமாகவல்லாமல் மற்றப்படி தண்ணீர் பாய்ச்சப்பட்டாலொழிய, அவை தண்ணீர் பாய்ச்சப்பட்ட பயிர்களாகக் கருதப்படமாட்டா. புலங்களின் கரைகளின்மேலாவது, வேறே இடங்களிலாவது தனித்தனியாய் தென்னைமரங்கள் வைத்து பயிராக்கப்பட்டால் ஒவ்வொரு மரமும் ஒரு செண்ட் நிலத்தில் இருப்பதாகக் கணக்கிட்டு அதற்கு வரி விதிக்கப்படும்.

Proviso :— ஆனால் எந்த ஒருபோக நஞ்சை நிலங்களில் இதுவரையில் நாளது 1342-ம் பசலி உள்பட ஊடு சாகுபடி செய்யப்பட்டுவருகிறதோ, அந்த நிலங்களின் ஊடு சாகுபடி ஒருபோக சாகுபடியாகவே கருதப்படும். கலெக்டருடைய உத்தரவின்பேரில் அப்படிப்பட்ட நிலங்களின் ஜாப்தா ஒன்றை தயார்செய்யப்பட்டு, அவரால் அங்கீகரிக்கப்பட்டு, ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். அந்த ஜாப்தாவில் சேர்க்கப்படாத ஒருபோக சாகுபடி நஞ்சை நிலங்களில், ஊடு சாகுபடி முறைப்படி சாகுபடி செய்யப்பட்டு, முதல்போக அறுவடைக்குப்பின் நிற்கும் ஒட்டம் அல்லது சம்பா பயிர்கள்—பூமியில் இருக்கும்பக்ஷத்தில் இரண்டாவதுபோகப் பயிராகக் கருதப்படும்.

நம்முடைய ஆக்ஷேபணைகளைச் சொல்வதற்குமுன் ஊடு சாகுபடியின் பழைய சரித்திரமும் அதைப்பற்றியுள்ள, சர்க்கார் உத்தரவுகளையும் சொல்வோம்.

1892-ம்வூத்தில் ஜில்லாவை முதல் பைசல்செய்த மிஸ்டர் கிளார்க்கு என்பவர் பின்வருவாறு தன் ரிபோர்ட்டில் எழுதியிருக்கிறார் :—" புஞ்சை தானியங்களைக் கலந்து சாகுபடிசெய்வது அநேகமாக எல்லா ஜில்லாக்களுக்கும் பொதுவாயுள்ளது. ஆனால் அவ்விதம் நஞ்சையில் நெல் தானியங்களைக் கலந்து சாகுபடிசெய்வது தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் வழங்கிவருகிறது. சீக்கிரத்தில் விளைகிற கடப்புநெல் $6\frac{1}{2}$ மாதங்களில் விளையக்கூடிய பிசானன் என்கிற நெல் தான்யத்துடன் கலந்து விதைக்கப்படுகிறது. இந்தவிதமாய் இந்த காவேரி டெல்டாவின் நடுபாகத்திலும், கீழ்பாகத்திலுமுள்ள அநேக கிராமங்களில் பழக்கம் இருந்துவருகிறது. இரண்

டும்சேர்ந்து ஏற்படுகிற விளைவானது, ஒரு தானியம் மாத்திரம் விதைத்தால் எவ்வளவுவிளையுமோ அதைவிடக் கொஞ்சம்தான் ஜாஸ்தியாக இருந்துவருகிறது. ஆகையால் இம்மாதிரி கலந்த சாகுபடிக்குத் தீர்வைபோட நான் உத்தேசிக்கவில்லை.''

ரெவினியு போர்டார், மிஸ்டர் கிளார்க்கு ரிபோர்ட்டை கவர்ன்மெண்டாருக்குத் தம்முடைய சிபார்சுகளுடன் அனுப்பினபொழுது, பின்வருமாறு அதைப்பற்றியே எழுதியிருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் அதிகமான விஸ்தீரணத்தில் அதாவது சுமார் 45,000 ஏகரா நஞ்சை நிலங்களில் ஊடு சாகுபடிசெய்யப்பட்டுவருகிறது. இதனுடைய விசேஷம் என்னவென்றால் இரண்டுவிதமான தானியங்கள் சேர்ந்து விதைக்கப்படுவதும் ஒரு தானியம் சுமார் 3 அல்லது $3\frac{1}{2}$ மாதங்களில் அருவடையாகக் கூடியதும் மற்றொரு தானியம் சுமார் $6\frac{1}{2}$ மாதகாலத்திலும் அறுவடையாகக்கூடியதுமாக வுள்ளது. ஒருபோக சம்பாவைவிட சுமார் 3, 4 வாரம் அதிகமாக பூமியிலிருக்கிறது. அதற்குள்ள ஜாஸ்தித் தண்ணீர் மாத்திரம் எடுத்துக்கொள்ளுகிறது. ஆனால் விளைவு விஷயத்திலும், பூமியிலிருக்கும் கால அளவு விஷயத்திலும், இருபோக சாகுபடிக்கு சமானமாகச் சொல்லவேமுடியாது.

சாதாரணமாக இருபோக சாகுபடிக்கு ஜலவசதி இல்லாத இடங்களில்மாத்திரம் ஊடு சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. அல்லாமலும் கடைசி காலங்களில் அதன் நிலைமை மழையின் அளவைப் பொறுத்ததாக இருந்துவருகிறது. அது நன்றாக விளையும்பக்ஷத்தில் ஒருபோக சாகுபடியைவிடக் கொஞ்சம் ஜாஸ்தி கண்டுமுதலாகக் கூடியதாக யிருந்தபோதிலும் அதிகத் தீர்வை போடுவதிலிருந்து ஏற்படக்கூடிய பளுவைத் தாங்கக்கூடியதாயுள்ள அதிகக் கண்டுமுதலைத் தரக்கூடியதல்ல. தாமதமாக விளையக்கூடிய தான்யத்தைமாத்திரம் சாகுபடி செய்யும்பக்ஷத்தில் ஜாஸ்தி தீர்வை போடக்கூடியதென்று ஒருவரும் கக்ஷிசொல்ல முடியாது. அப்படியிருக்க அத்துடன்கூட சீக்கிரத்தில் அறுவடை செய்யக்கூடிய தான்யத்தைக் கலந்து விதைப்பதனால்மாத்திரம் அதிகத் தீர்வை போடும்படியான நியாயம் ஏற்படவில்லை. சட்டப்படிபார்த்தாலுங்கூட அதிகத் தீர்வை போடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. நிலத்திற்கு விஸ்தீரணப்படி தீர்வை விதிக்கப்படுகிறது. இரண்டுவித மகசூல்கள் ஒரேகாலத்தில்

ஓரே ஸ்தலத்தில் உண்டாகமாட்டாது. ஜாஸ்தி தீர்வை போடும் விஷயம் கிராம அதிகாரிகளிடத்தில் அதிக அதிகாரத்தை சுமத்தக் கூடியது. இது விரும்பத்தக்கதல்ல.

17—2—1892வுயுள்ள 116 நெ. போர்டு ப்ரொஸீடிங்க்ஸில் விஷயங்களை விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. ரெவினியு போர்டார் உத்தரவுப்படி மாயவரம் தாலுகா நிலங்களை மறுபைசல் செய்யும்படி கட்டளையிட்டபொழுது மிஸ்டர் கிளார்க்கு மறுபடியும் பின் வருமாறு சொல்லியிருக்கிறார் :—"விசாரணைகளிலும் ஸ்தலங்களில் நடத்திய பரிசோதனைகளைக்கொண்டும் ஊடு சாகுபடி நிலங்களில் ஒருபோக வரும்படிக்குமேல் ஏகர் 1-க்கு சுமார் நாலைந்து கலம் ஜாஸ்தியாகக் கிடைக்கக்கூடியதில்லையென்று எனக்குத் திருப்தியாய்த் தெரிகிறது."

இரண்டாம் போகத் தீர்வை ஒரு ஏகரா நிலத்திற்கு சராசரி ரூ 4 ஏற்படுமாகையால் ஷை 4 அல்லது 5 கலம் ஜாஸ்தி கிடைப்பதினால் மிராசுதாருக்கு ஏற்படக்கூடிய லாபம் சர்க்காருக்கே பூராவும் போய்விடும். அப்படித் தீர்வை போட்டால் சந்தேகமில்லாமல் ஊடு சாகுபடி நிறுத்தப்பட்டுப்போய்விடும். அதனால் சர்க்காருக்கும் லாபமில்லை. அதனால் 50,000 ஏகர் சம்பந்தமாய் மிராசுதார்களுக்கு சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய் நஷ்டம் சம்பவித்து ஜில்லாவில் 7000 டன் அரிசி உற்பத்தி குறைந்துவிடும்.

ஷை போர்டு-ஆப்-ரெவினியூ செய்த சிபார்சுகளை சர்க்காரில் 31—7—93 தேதியுள்ள (ஜி. ஓ. 1697) உத்தரவில் ஒப்புக்கொண்டு ஊடு சாகுபடிக்கு வரி யில்லை என்று சொன்னபொழுது பின்வருமாறு கூறியிருக்கிறார்கள் :—"இராஜாங்கத்தின் அக்கரையைமட்டில் கவனித்தால் ஜனங்களுக்குப் போடப்படும் வரியானது அதிக பளுவாயுள்ளதாயும் ஜில்லாவின் அபிவிருத்திக்கு இடையூர் உள்ளதாகவும் இல்லாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது முக்கியமான கடமையாகும்."

மிஸ்டர் ஜாக்ஸன் 1922-ம் வருஷத்தில் மறுபைசல் செய்தபொழுது பின்வருமாறு சொல்லியிருக்கிறார் :—"ஊடு சாகுபடியானது தஞ்சை டெல்டாவிலும் பக்கத்திலுள்ள சிதம்பரம் தாலுகாவிலும் விசேஷமாயுள்ளது..................இரண்டு தான்யங்களையும்

கலந்து சாகுபடிசெய்வதில் எல்லாம் ஒத்துக்கொள்ளும்பக்ஷத்தில் இருபோக சாகுபடியின் கண்டுமுதலுக்குக் கொஞ்சம் குறைவாக சில இடத்திலும், ஒருபோக சாகுபடியின் கண்டுமுதலுக்கு சாதாரணமாய் ஜாஸ்தியில்லாமல் மற்ற இடங்களிலும் இருந்துவருவதாகத் தெரிகிறது. ஆனல் முன்கோப்பில் ஒரு நெல் மகசூல் கைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருப்பதால் சௌகரியமென்று பாராட்டப்பட்டுவருகிறது. ....முன் சாலேவிட இந்தப் பைசலில் ஊடு சாகுபடி ஜாஸ்தியாயிருக்கிறதா என்று தெரிய சரியான ரிகார்டுகளில்லே. போன பைசலில் 45,000 ஏகர் என்று கிராமக் கணக்கப்பிள்ளேகள் சொல்லுவதைக்கொண்டும் தன்னுடைய மதிப்பைக் கொண்டும் மிஸ்டர் கிளார்க் திட்டம் போட்டார். இப்போதைய நிலேமையை ஒத்திட்டுப்பார்க்க நன்னிலம், நாகபட்டணம், திருத்துறைப்பூண்டி இந்தத் தாலூகாக்களில் அவைகளின்
நான் வாங்கிப் பார்த்ததில் சென்ற 25வருஷத்திற்கு அதிக மாறுதலில்லே என்று தெரிகிறது. இப்போதைய ஊடு சாகுபடி விஸ்தீர்ணம் 25,717 ஏகர். அதே தாலூகாக்களில் மிஸ்டர் கிளார்க் மதிப்பு 25,206 ஆகும். ஆகையால் ஜாஸ்தியாகவில்லே. சீர்காழி, மாயவரம் இந்தத் தாலூகாக்களில் கொஞ்சம் ஜாஸ்தி ஆகியிருக்கலாம் என்று என்னுடைய அபிப்பிராயம்.................... எந்தப் பாகத்தில் தண்ணீர் பாசனவசதிகள் போதாததாகயிருக்கின்றனவோ அவ்விடங்களில் ஊடு சாகுபடி வழங்கிவருகிறது. சில இடங்களில் ஊடு சாகுபடி விஸ்தீர்ணமானது எரு எவ்வளவு கிடைக்குமோ அதைப் பொறுத்ததாயிருக்கிறது. மொத்தமாக ஒவ்வொரு கிராமத்திலும் பதிவான தாக்குகளில்தான் ஊடு சாகுபடி செய்யப்பட்டுவருகின்றது. நீண்டகாலமாய் நஞ்சைநில ஊடு சாகுபடிக்கு ஒருபோக நஞ்சைத் தீர்வைதான் விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நன்றாக ஏற்பட்டு வந்திருக்கிற ஒரு சௌகர்யத்தில் எவ்விதமாக மாறுதல் செய்தாலும் அது மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கும். இப்போதைய நடவடிக்கையே இருந்துவரவேண்டியதே தவிர வேறில்லே. தென்னற்காடுஜில்லாவில் இந்த சௌகர்யத்தை ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறது.” இந்த சிபார்சை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டார்கள்.

2. 1931-ம் வருஷம் ஜூன்மீ 8-ந் தேதியுள்ள 1244-ம் நம்பருள்ள ஜீ. ஒ.-வில் ஊடு சாகுபடி விஷயமாகவும் தென்னே முதலிய, துபஸல் மகசூல் விஷயமாய் அதிகத் தீர்வை போட உத்தேசித்திருப்

பதாகவும் அதுவிஷயமாய் ஆக்ஷேபனையிருந்தால் அதைத்தெரிவிக்கும் படியும் சர்க்காரில் விளம்பரம் செய்தார்கள். மிராசுதார்கள் கிராமங் களிலும் தாலூகா நகரங்களிலும் பொதுக்கூட்டங்கள் கூடி அவ்விதம் ஜாஸ்தி தீர்வை போடக்கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். கும்ப கோணத்தில் ஜில்லா மகாநாடு கூடி அப்போதும் ஆக்ஷேபித்தார்கள். மகஜர் நாமாவில் கையெழுத்துசெய்து சர்க்காருக்குத் தங்கள் ஆக்ஷே பனையைத் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அவ்வித ஆக்ஷே பங்களுக்கு சமாதானங்கள் சொல்லப்படவில்லை. இப்படிக்கிருக்க மறுபடியும் ஏகரா 1-க்கு 7—8—0 ரூபாய் வீதம் தண்ணீர்த் தீர்வை விதிப்பதாகப் போட்டிருக்கும் உத்தரவானது கொஞ்சமாவது நியா யத்தை ஒத்ததாகமாட்டாது. மிராசுதார்களுக்கு ஏராளமான துன்பத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கும். விவரமாக எங்களு டைய ஆக்ஷேபனையைப் பின்பாராக்களில் எடுத்துக்காட்டி இருக் கிறோம்.

3. புதிதாய் சர்க்காரில் போட்டிருக்கும் உத்தரவை நன்றாய் வாசிக்குமளவில் ஒரு நிலத்தில் தொடர்ந்து நாளது பசலியிலுள்பட ஊடுசாகுபடி செய்துவந்திருந்தால்மாத்திரம் அந்நிலம் கலெக்டர் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டு புதுத் தீர்வையிலிருந்து விலக்கப்படு மென்று அர்த்தமாகிறது. அதாவது தெய்வகதியினாலாவது அல் லது சௌகரியக்குறைவுகளினாலாவது ஒரு வருஷத்திலோ அல்லது பல வருஷங்களிலோ ஒரு நிலம் ஊடு சாகுபடி செய்யாமல் நிறுத்தி இருக்கும்பட்சத்தில் அது கலெக்டர் ஜாப்தாவில் சேர்க்கப்படமாட் டாது. இது பெருத்த கஷ்டத்தை மிராசுதாருக்கு விளைவிக்கும், ஏனென்றால் அநேக இடங்களில் மாறி மாறி ஸ்தலங்களில் வசதி களை உத்தேசித்து ஊடு சாகுபடி செய்கிறார்கள்.

ஜில்லா கலெக்டர் உத்தரவின்கீழ் ஊடு சாகுபடி நிலங்களின் ஜாப்தா தயார்செய்யப்படுமாம். இனி ஒவ்வொருவரும் தஞ்சை ஜில்லா கெஜட்டை வரவழைத்துப் பார்க்கவேணும். இது முடியுமா. எல்லோருக்கும் படிக்கத்தெரியுமா. மேலும் கிராம உத்தியோகஸ் தர்கள் தவறுதல்கள் செய்யலாம். இதற்கெல்லாம் கிராமங்களில் முந்திய தண்டோராவும் பிரசுரமும் செய்தால் நலமல்லவா;

கிராம அதிகாரிகளிடம் ஜாஸ்தியாக அதிகாரத்தை சமத்து வது தவறு' என்று 1892ஷு சொல்லிய கவர்ன்மெண்டு அபிப்பிரா

யத்திற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கும் இப்புதிய விதி விரோதமாகுமே.

ஒரு நிலம் ஊடு சாகுபடிநிலம் அல்லவென்று உத்தியோகஸ்தர்களுக்கும் மிராசுதாருக்கும் வித்யாசங்கள் ஏற்படக்கூடும். யார் தீர்க்கிறது. தீர்ப்பதற்கும் யாதொருவிதமான வழியாவது அல்லது தீர்ப்பு செய்யக்கூடிய அதிகார எல்லையாவது ஏற்படுத்தப்படவில்லை.

மேலும் கிராம அதிகாரிகளுக்கு ஊடு சாகுபடி நிலங்களை மேற்சொல்லிய ஜாப்தாக்களில் சேர்க்கும் விஷயத்தில் ஏராளமான அதிகாரம் ஏற்பட்டுவிடுகிறது. அது விரும்பத்தக்கதல்ல என்று கவர்ன்மெண்டாரே ஏற்கனவே 1892-ம் வருஷத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஷெ. ஜீ. ஓ-வி லுள்ள நிபந்தனைகள் நாளது பசலி முடிய இது வரையில் ஊடு சாகுபடி செய்த நிலங்களைமாத்திரம் கலெக்டர் தயார் செய்யும் ஜாப்தாவில் சேர்க்கப்போவதாக ஏற்படுகிறது. அதிலிருந்து 1932–33-ஹு முடிய நாளதுவரையில் விடாமல் நெடுகிலும் ஒரு நிலத்தில் ஊடு சாகுபடி செய்திருந்தாலல்லது அதை ஜாப்தாவில் சேர்க்கமுடியாது என்று அர்த்தம் ஒருவேளை சொல்லலாம். அந்தப்படி கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படாவிட்டால் அதை வியக்தமாகச் செய்துவிடவேண்டும். அப்படிக்கில்லாதபக்ஷத்தில் மிராசுதார்களுக்கு அது ரொம்பவும் விரோதமானதாயும் கஷ்டமானதாயும் இருக்கும். ஏனென்றால் தெய்வாதீனமாகவாவது அல்லது காலத்தின் விபரீதத்தினாலாவது ஏதாவது ஒரு ஸ்தலத்தில் ஒரு வருஷத்திலோ அல்லது சில வருஷங்களிலோ ஊடு சாகுபடி நிறுத்தப்பட்டுப் போயிருந்தால் அந்த நிலம் ஜாப்தாவில் சேர்க்கப்படமாட்டாது என்று ஏற்படும். மேலும், சில தாலூகாக்களிலுள்ள வழக்கப்படி, அநேக மிராசுதார்கள் ஊடு சாகுபடி ஒரே இடத்தில் செய்யாமல் மாற்றி வெவ்வேறிடங்களில் ஊடுசாகுபடி செய்துவந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் நிலங்களை ஜாப்தாவிலேயே சேர்க்கமாட்டார்களா ?

ஆரம்பத்தில் நில ஜாப்தாவிற்கு ஆக்ஷேபணையுண்டாவென்று ஒரு விளம்பரமாவது பிரசுரமாவது செய்யவேண்டும்.

மிராசுதார்களுக்கும் ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கும் ஏதாவது அபிப்பிராய பேதமிருந்தால் அதைத் தீர்க்கவேண்டியதற்கான சரியான மார்க்கம் ஏற்படுத்தவேண்டும்.

அம்மாதிரி ஏற்படும் முடிவுகளுக்கு அப்பீல் செய்து கொள்ளவும் சௌகரியங்கள் இருக்கவேண்டும்.

இன்னின்ன நிலங்களில் ஊடு சாகுபடி என்று தீர்மானம் செய்துவிடக்கூடிய ரிவினியூ ரெக்கார்டுகளும் கிடையாது. மிஸ்டர் ஜாக்ஸன் சொல்லியிருக்கிறபடி வில்லேஜ் ஆபீசருடைய புள்ளிகள்தான் நமக்குக் கிடைக்கக்கூடியது.

4. தவிர கலெக்டர் ஜாப்தாவில் சேர்க்கப்படாத நிலங்களில் ஊடு சாகுபடி செய்தால் நஞ்சைத் தீர்வையுடன்கூட ஏகருக்கு 7–8–0 ரூபாய் தீர்வை செலுத்தவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். இது மிகவும் அக்கிரமம். அதாவது தற்கால விலைப்படி ரூ 4, 5 ஆகும். மாயவரம் தாலுகாவை உதாரணமாய் எடுத்துக் கொண்டால் இவ்விடத்தில் சராசரித் தீர்வை ஒரு ஏக்கருக்கு ரூ 7–2–0 என்று ஏற்படுகிறது. இருபோக சாகுபடி செய்தால் அதில் பாதி அதாவது 3–9–0 கூட வசூல் செய்கிறார்கள். ஊடு சாகுபடியாய் இருந்தால் முந்தி ஒன்றும் ஜாஸ்தி தீர்வை கிடையாது. இப்பொழுது ரூ 7–8–0 ஜாஸ்தி கொடுக்கவேண்டும். அதாவது இருபோக சாகுபடி வரியைவிட ஜாஸ்தி. இது ஒருவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அப்படியானால் தற்கால விலைப்படி ரூபாய் 4 அல்லது 5 கூட கிடைக்கக்கூடியது. ஆனால் ஊடு சாகுபடிக்கான செலவுகளைப் பார்ப்போம். ஒருபோக நிலத்தைவிட ஜாஸ்தியான எரு அடிக்கவேண்டும். ஜாக்சன் அவர்களே அவர் ரிப்போர்ட்டில் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒரு ஏகர் ஒருபோக நிலத்துக்கு 12, பெண்பிள்ளைகள் நடத்தேவையாயிருந்தால் இதற்கு 18 பேர்கள் வேண்டும். ஊடும், களையும், கூடவாழ்கிறது என்று பெரியோர்கள் சொல்வார்கள். இதற்கு ஜாஸ்தி கூலி கொடுத்து களை எடுக்கவேண்டும். இவ்விதங்களில் சுமார் 8 அல்லது 9 ரூபாய் ஜாஸ்திசெலவு செய்யவேண்டும். அப்படி செலவுசெய்தாலும் நமக்குக் கிடைக்கும் வைக்கோல் குறைவுபடுவதோடு மழையினால் கெடுதலாயும் போய்விடுகிறது. ஆகையால் மொத்த அளவில் ஒருபோக சாகுபடியைவிட ஊடு சாகுபடியில் நஷ்டம்தான் ஏற்படும்.

குருவையும் ஒட்டடன் நெல்லும் சம்பா நெல்லைவிட கலம் 1-க்கு நாலணு சாதாரணமாகக் குறைத்து விற்பதைப் பார்க்கிறோம். ஆகையால் பணமாக்கிப் பார்த்தால் ஊடு சாகுபடியில் லாபம் ஏது.

ஆனுல் இப்படி லாபம் இல்லாமல் நஷ்டத்துக்கு ஏன் ஊடு சாகுபடி செய்யவேண்டும் என்று கேட்கலாம். அதற்குப் பதில் பின் சொல்லியிருக்கிறோம்.

சாதாரணமாக இந்த ஜில்லாவில் சிகப்பு சிறுமணியன் சம்பா நெல்தான் சாகுபடியாகிவருகிறது. இதற்கு ஆவணி முதல்தேதி முதல் 20-ந்தேதி வரையில் நடவு நடுகிறோம். எல்லோரும் மேற்படி சம்பா நெல்லை மாத்திரம் பூரா நிலங்களிலும் சாகுபடி செய்தால் அதற்குத் தகுந்த வசதிகளும் கூலிகளும் கிடைக்குமா? அவ்விதமே ஒரேகாலத்தில் அருவடை செய்யவேண்டி இருந்தால் கூலி வகையரு வசதிகள் கிடைக்குமா? கிடைக்கமாட்டாது. அதனுல் மிராசுதார்களுக்கு நஷ்டம் வந்துவிடும். ஆகையால்தான் பற்பல சமயங்களில் நடவு நடக்கூடியதும், அருவடை செய்யக்கூடியதுமான ஸ்திதியில் உள்ள வெவ்வேறுமாதிரி நெல்லை சாகுபடி செய்கிறார்கள். அவ்விதமேதான் ஒட்டடன் நெல்லும்.

இவ்விதம் செய்வதில் இன்னும் ஒரு அனுகூலம் இருந்துவருகிறது. நமது வேலை செய்யும் ஆள்களுக்கு அனேகமாக வருஷம் பூராவிற்கும் வேலை கொடுத்துக் கூலி கொடுப்பது நமது கடமையல்லவா. குருவை இல்லாதுபோனுல் ஆடிமாதத்தில் அவர்களுக்கு வேலையேது? சம்பா நெல் அருவடையானபிற்பாடு ஒட்டடன் நெல்லை கடைசியாக அருவடை செய்கிறோம். இவ்விதம் குருவை சாகுபடி ஆரம்பகாலமாகிய அக்டோபர்மாதம்முதல் ஒட்டடன் அருவடைகாலமாகிய மார்ச்சுமாதம் வரையில் வேலை இருந்துவருகிறது. பிந்தி குழிவெட்டவோ, எரு அடிக்கவோ, புஞ்சையில் வேலைசெய்யவோ பற்பலவிதமாய் வேலைகொடுத்துவருகிறோம். குருவையும் ஒட்டடனும் கூலிஆள்களுக்கு முக்கியமாய்த் தேவையாய் உள்ள ஆகார வஸ்துக்களாகும்.

ஒருவகை தான்யம் வீணுகப்போய் நஷ்டமாகும்பக்ஷத்தில் மற்றொருவகையாவது மிராசுதார்களுக்குக் கைகூடவேண்டாமா?

இந்த ஜில்லாவில் ஏழை மிராசுதார்கள்தான் ஜாஸ்தியாய் இருக்கிறார்கள். ஒரு மகசூலாவது கைகூடாதபக்ஷத்தில் அவர்கள் எவ்விதம் காலக்ஷேபம் செய்வது. இதற்காக ஜாக்கிரதையை முன்னிட்டு சம்பாவும் ஒட்டடனும் பயிரிட்டால் அதற்கு வரியா ?

ஏழை மிராசுதார்கள் 100-க்கு 80-பேர்கள் இருந்துவருகிறார்கள். சராசரி ஒருவேலிக்கு குறைந்தே கணக்கிடலாம். அவர்களுக்கு ஒருவருஷத்தில் இரண்டு சாகுபடி செய்வது அவசியமல்லவா ? மேலும் தீபாவளிகாலத்தில் வருஷாந்திரம் வஸ்திரம்வாங்கும்படியாய் ஏற்படுகிறது. மழைகாலத்தை நோக்கி முன்ஜாக்கிரதை உணவுப்பொருள்கள் சேகரம் செய்யவேண்டி இருக்கிறது. இதற்காகவேண்டி தீபாவளிக்குமுந்தி ஒரு மகசூல் தயார்செய்துகொள்ள வேண்டாமா ?

5. இப்பொழுது இவ்விதம் அதிகத் தீர்வை விதிப்பதற்கு சர்க்காரில் காரணங்கள் சொல்லப்படவில்லை. ஆகையால் அவைகளை ஊகிக்கவேண்டியதாக இருக்கிறது. ஊடு சாகுபடியினால் இருபோக சாகுபடி ஏற்கனவே குறைந்துவிட்டது என்றும், இனியும் அவ்விதம் குறைந்துவிடும் என்றும் அதனால் தங்களுக்குத் தண்ணீர்த்தீர்வையினால் வரும் வருமானம் குறைந்துவிடும் என்றும் ஒருகால் சர்க்காரில் நினைக்கலாம். அவ்விதம் நினைத்து இம்மாதிரியாக ஏக்கர் 1-க்கு 7—8—0 ரூபாயாகத் தண்ணீர்த்தீர்வை போட்டிருக்கலாம். அப்படி சர்க்கார் நினைப்பது தவறு. ஏனென்றால் ஏற்கனவே நாம் எடுத்துக்காட்டி இருக்கிறபடி ஊடு சாகுபடியானது லாபத்தை உத்தேசித்து செய்யப்பட்டது இல்லை. லாபம் நிச்சயமாய்க் கிடைக்கமாட்டாது. நஷ்டம் ஏற்பட்டாலும் முன்சொன்ன நிர்ப்பந்தமான காரணங்களால் ஊடு சாகுபடி வழங்கிவருகிறது. இக்காரணத்தினால் தான் 100-க்கு 80-ஏகராவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுவரும் இந்த ஜில்லாவில்மாத்திரம் ஊடு என்கிற நூதனமான பயிர் இருந்துவருகிறது. இதுவும் புராதனமாய் காவேரி பாசன ஆரம்பகாலமுதல் ராஜாங்கத்தின் தண்ணீர்த்தீர்வை ஏற்படுவதற்குமுந்தியே பழக்கத்தில் இருந்துவருகிறது. அல்லாமலும் ஊடு சாகுபடி செய்யப்பட்டுவரும் விஸ்தீரணம் ஜாஸ்தி ஆகவில்லை என்று சர்க்கார் உத்தரவிலிருந்தே தெரியவருகிறது. இவைகளிலிருந்து லாபத்திற்காக சாகுபடி செய்யப்படவில்லை என்று விளங்கவில்லையா ? ஒரு மிராசுதார் குறைந்தவிலைக்கு விற்கக்கூடிய நெல்லை சாகுபடிசெய்வானா ? ஏழைத்

தனமும், நிர்ப்பந்தமும் அச்சாகுபடி செய்யும்படி தூண்டிவிடு கிறது.

ஊடு சாகுபடிக்கு காவேரித் தண்ணீர் ஜாஸ்தியான பிரயோ சனம் ஆகமாட்டாது. அது மழையினுல் பிழைத்துவரும் மகசூல். வடகிழக்குப் பருவம் சரியாக ஒத்துவரும்பக்ஷத்தில் சரியாக விளை யும். இல்லாவிட்டால் சூரை விழுந்து கெட்டுப்போய்விடும்.

இப்படிக்கெல்லாம் இருக்க, ஏகரா 1-க்கு ரூ 7—8—0 வீதம் தண்ணீர்த் தீர்வை போடுவது கொஞ்சமாவது நியாயமாகமாட் டாது. ஜாஸ்தியாய் ஏழைகளைத் துன்பப்படுத்தும். இதைத் தாங்கி ஒருவராலும் நிர்வாகம் செய்யமுடியாது. அவர்கள் அழிந்துபோ ஞல் சர்க்காருக்கு நஷ்டம் அல்லவா? அவர்கள் நன்ருய் இருந்தால் மட்டும் அரசாங்கத்துக்குப் பலம் உண்டு.

6. எந்தவிதமாய்ப் பார்த்தாலும் ஏற்கனவே ஊடுசாகுபடிசெய் யப்பட்டுவரும் விஸ்தீரணங்களைத் தொடராமல்விட்டுவிடுவதே நியாய மாகும். இதிலும் ஒரு விஷயத்தை சர்க்காரில் கவனிக்கவேண்டும். சுமார் 10 வருஷமோ 15 வருஷமோ எடுத்துக்கொண்டு அந்தக் கெடுவில் எந்த ஒரு வருஷத்திலாவது ஒரு நிலத்தில் ஊடு சாகுபடி செய்யப்பட்டுவந்தால் அந்த நிலத்தை புதிய தீர்வையிலிருந்து விலக் கிவிடவேண்டும். ஏனென்ருல் இப்பக்கங்களில் சாகுபடி வசதிகளை உத்தேசித்து வயல்களை வருஷாவருஷம் மாற்றி ஊடு சாகுபடி செய்துவருவது வழக்கம். ஊடு வயல்களுக்கு முதலில் பூரா எரு கொடுத்துவிட்டு பாக்கி இருந்தால் பாக்கி நிலங்களுக்கு உபயோகப் படுத்தப்படும். இம்மாதிரி செய்வதிலிருந்து காலக்கிரமத்தில் பூமி யின் சாரமும் குறைவுபடாமல் நிலைநிறுத்தப்பட்டும் சீர்திருத்தப் பட்டும் வரும்.

விவசாய இலாகாவில் உங்களுடைய நிலங்களை நல்ல எருக்கள் முதலானது அடித்து நவீனமான கலப்பைகளை உபயோகித்து சீர் திருத்தங்கள் செய்யுங்கள் என்றும், நெல் சாகுபடியைக் குறைத்துக் கொண்டு கரும்பு சாகுபடியைச் செய்யுங்கள் என்றும் பலமாக உப தேசங்கள் செய்யுங்காலத்தில் அதற்கு இடையூறாக ஏற்படக்கூடிய இப்புதிய தீர்வையை வரி இலாகாக்காரர்கள் போடுவது பொருந்த மாட்டாது. அக்கிரமமாகும்.

7. பல சமயங்களில் தாங்களும் தங்களுடைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களும் அளித்த வாக்குத்தத்தங்களைக் காப்பாற்றுவது சர்க்காரின் தர்மமல்லவா? முன் பிறப்பிவித்த உத்தரவுகளை நம்பி நடந்துவரும் ஏழை ஜனங்களைக் காப்பாற்றுவது அவர்கள் கடமை அல்லவா? இப்பொழுது விதிக்கப்படும் புதிய தீர்வையானது பழைய உத்தரவுகளுக்கும், வாக்களிப்புகளுக்கும் கண்டிப்பாய் விரோதமாய் இருந்துவருகிறது. ஆகையால் புதிய தீர்வையை ரத்து செய்துவிடவேண்டும்.

இரண்டாம் பாகம்.

இப்பொழுது இருபோக சாகுபடி விஷயமாய் ஏக்ரா 1-க்கு ரூ 7—8—0 வீதம் தண்ணீர்த் தீர்வை போடுவதாய்ச் சொல்லியிருக்கும் விஷயத்தைக் கவனிப்போம்.

1. 1892-ம் வருஷத்தில் கனம் கிளார்க் இந்த ஜில்லாவில் சுமார் 72,000 ஏகரா நிலங்கள் இருபோக சாகுபடி செய்யப்பட்டு வந்ததாகக் கணக்கிட்டிருக்கிறார். (இதில் சுமார் 23,430 ஏகரா இருபோக சாகுபடியாக செட்டில்மெண்டு கணக்கில் பதிவுசெய்யப்பட்டுவிட்டது.) 1922-ம் வருஷத்தில் கனம் ஜாக்ஸன் சராசரி 57,541 ஏகரா இருபோகசாகுபடியாக வைத்துக்கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறார். 1341-ம் பசலி சர்க்கார் நிலவரி ரிபோர்ட்டைப் பார்வையிட்டாலும் கனம் ஜாக்ஸன் சொல்லுவது சரியென்று தெரியும். ஆகையால் இதிலிருந்து 1892-க்கு பிற்பாடு சுமார் 15,000 ஏகரா இருபோக சாகுபடி நிலம் குறைந்துவிட்டதென்று நன்றாய் விளங்கும். இதற்குக் காரணம் பின்பு சொல்லுவோம்.

2. இப்பொழுது தீர்வை விதிக்கும் விஷயமாக நிலங்களை 12 தரமாகப் பிரிவினைசெய்திருக்கிறார்கள். முதல்தரத்திற்கு கிஸ்தி ரூ 16—10—0 ஆகும். கடைசி தரத்திற்கு கிஸ்தி ரூ 2—2—0 ஆகும். திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, சீர்காழி, மாயவரம் தாலூகாக்களில் அநேகமாய் நிலங்கள் 5 முதல் 10 தரங்களில் அடங்கியிருக்கின்றன. நன்னிலம் தாலூகாவில் கொஞ்சம் 3, 4 தரம் நிலங்களும் இருக்கின்றன. கும்பகோணம் தாலூகாவில் இவைகளுடன் கொஞ்சம் இரண்டாந்தரம் நிலங்களும் இருக்கின்றன. தஞ்சாவூர் தாலூகாவில் முதல்தரம் நிலங்களும் காணப்படுகிறது.

3. இருபோக சாகுபடி நிலங்களில் ஏற்கனவே சொன்னபடி 25,000 ஏகரா சர்க்கார் கணக்குகளில் அயன் தீர்வைக்குப் பெரும்பான்மையும் $1\frac{1}{2}$-ப்பங்காக திட்ட இருபோகமாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இவைகளைப் புதிய விதிகள் பாதிக்காது. ஆகையால் இவைகள் போக பாக்கி 32,500 ஏகராக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. சராசரி கணக்கு பார்க்கும்பொழுது அவைகளை 4 முதல் 7 தரங்கள் வரையில் உள்ள நிலங்களாக வைத்

துக்கொள்ளலாம். அத்தரங்களுக்கு முறையே ரூ 10—10—0, 9—8—0, 8—4—0, 7—2—0 அயன் தீர்வைகளாக இருக்கின்றன. இப்பொழுது இருபோக சாகுபடிக்கு அவைகளின் பாதியை தண்ணீர்த் தீர்வையாக வசூல்செய்கிறார்கள். சராசரி கணக்கு பார்க்கும் பக்ஷத்தில் இவைகளுக்கு ஏகரா ஒன்றுக்கு ரூ 5 வீதம் தண்ணீர்த் தீர்வை வசூல் செய்வதாக வைத்துக்கொள்ளலாம். இந்த சந்தர்ப்பத்தில் ஏகரா ஒன்றுக்கு ரூ 7–8–0 தண்ணீர்த் தீர்வை விதிக்கும் பக்ஷத்தில் ரூ $2\frac{1}{2}$ அதாவது 100-க்கு 50 ஜாஸ்தி வரி கொடுக்கும்படியாக ஏற்படுகிறது. இவ்விதமாய் 32,000 ஏகராவுக்கு வருஷத்தில் 80,000 ரூபாய் ஜாஸ்தியாகிறது. நாம் எல்லோரும் இப்பொழுதிருக்கும் வரியே தாங்கவில்லை என்றும் குறைக்கவேண்டுமென்றும் போராடி ஒருவாறு அதை சர்க்காரில் ஒப்புக்கொண்டு நிறுத்தி வைத்திருக்கும்தருவாயில் இவ்விதம் தண்ணீர்த் தீர்வையை 100-க்கு ஐம்பது ஜாஸ்தி செய்வது பெருத்த அநீதியாகும், எவ்வளவு கஷ்டநஷ்டமாக இருந்தபோதிலும் மிராசுதார்கள் இருபோக சாகுபடியைத் திடீரென்று நிறுத்தமாட்டார்கள். முந்திய ஊடு விஷயமாகச் சொன்ன வியாசத்தில் ஊடு இருபோகம் இவைகள் சாகுபடிசெய்யும் காரணங்கள் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பெருந்துயரத்தைப் புதியவிதிகள் கண்டிப்பாய் உண்டாக்கிவிடும்.

4. இந்த இராஜதானியில் உள்ள மற்ற ஜில்லாக்களில் வழங்கி வரும் தண்ணீர்த் தீர்வையைப் பார்ப்போம். மனுஷ்ய எத்தனங்களுக் கடங்கியதும், நேர்மை செய்யப்பட்டதுமான கோதாவரி, கிருஷ்ணா பாசனமுறைகளில் இருபோக சாகுபடிக்கு ஏக்கரா ஒன்றுக்கு ரூபாய் ஐந்துவீதம் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. பெரியார் தொழுதூர் பாசனங்களில் முறையே ரூ 3, $3\frac{1}{2}$-தான் விதிக்கப்பட்டிருக்கிறது.

1930–1931-ஆம் வருஷத்திய D. P. W. நிர்வாக ரிபோர்ட்டின் F. கோஷ்பாராவில் காண்க. இப்படிக்கிருக்க வானம்பார்த்த காவேரி பாசன முறையில் இந்த நெருக்கடியான நிலைமையில் ரூ 7—8—0 போடுவது தர்மமல்ல.

5. இந்த ஜில்லாவில் இருபோக சாகுபடிசெய்யும் விதத்தை சற்று கவனிப்போம். ஒருபோக சாகுபடிக்கு சம்பாவிதை ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் விதைக்கப்படுகிறது. இருபோக சாகுபடிக்கு

தாளடி, சம்பா விதை ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் விதைக்கப் படுகிறது. பிற்பாடு நாத்துக்கள் நாத்தங்காலில் சுமார் 40-நாள் வளருகின்றன.

6. அக்டோபர் மாதத்தில் நடவு பேர்டப்படுகிறது. அப் பொழுது வயல்களிலிருந்தும் ஜலத்தை வடிக்கட்டி பயிர்கள் பச்சை பிடிக்கிறவரையில் காயவைக்கப்படுகிறது. பிறகுதான் ஜலம் விடப் படுகிறது. இப்பொழுது வடகிழக்கு பருவம் (கீழ்மாரி) ஆரம்பித்து மழை பெய்கிறது. அம்மழையைக்கொண்டு இப்பயிர் ஓங்கி வளரு கிறது.

பிப்ரவரி மாதத்தில் அருவடை துவக்கப்பட்டு மார்ச்மாதம் வரையில் நடைபெறும். இதைக்கொண்டு தாளடி சாகுபடியானது கீழ்மாரி வசதியை முற்றிலும் பொறுத்ததாக இருக்கிறது. காவேரி ஜலத்தினல்மாத்திரம் பிரயோஜனப்படமாட்டாது. ஆனுலோ காவேரி ஜலம் ஜாஸ்தியாகும்பக்ஷத்தில் இரண்டும் பெருகி வெள்ள மாகிப் பயிர்களைக் கெடுத்துவிடும். அப்பொழுது ஜலத்தை வடிகட்ட கஷ்டப்படவேண்டும்.

7. ஏற்கனவே 3-வது பாராவில் 15000 ஏகரா இருபோக சாகுபடி குறைந்துவிட்டதாகச் சொன்னேம். அதற்குக் காரணம் என்ன. 1892-முதல் 1917-க்குள் சர்க்காரில் பாசன வசதிகள் குறைவு செய்யப்பட்டன என்று சொல்லமுடியாது. அப்படியா னுல் விஸ்தீர்ண குறைவுக்குக் காரணம் வேறு இருக்கவேண்டும். அது என்னவென்றுல் வடகிழக்கு பருவத்தின் அனுகூல பிரதிகூல நிலைமையும் எருவுபோடக்கூடிய சக்தியும்தான். கனம் ஜாக்ஸனும் நிச்சயமாக ஜலவசதிகள் இருந்தபோதிலும் எருவு குறைவுகள் தாளடி சாகுபடியைத் தடுக்கிறது என்று எழுதியிருக்கிறுர்.

8. காவேரி பாசன ஆரம்ப காலங்களில் ஏராளமாக வண்டல் வந்துகொண்டிருந்தன. ஈஜிப்ட் தேசத்தில் நைல் (Nile) என்னும் நதி தேசங்களை எவ்வளவு செழிப்பாகச் செய்ததோ அவ்விதம் தஞ் சாவூர் ஜில்லாவை காவேரி செழிப்பாக்குகிறதென்று கனம் கிளார்க் எழுதியிருக்கிறுர். 1891-வருஷத்தில் ஷெ வண்டல் வரவர குறைந்து விட்டதென்றும் அதனல் பூமியின் சாரம் குறைந்துவிட்டதென்றும் அதற்காக ஜாஸ்தி எருவு பூமிக்குப் போடவேண்டியிருக்கிறதென்

றும் மிராசுதார்கள் முறையிட்டார்கள். அப்பொழுது ஜில்லாக் கலெக்டராக இருந்த கனம் தாம்ஸன் மிராசுதார்களின் குறை வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டார். பூமியின் சாரம் குறைந்துவிட்டதால் ஜாஸ்தி எருவு அடிக்கவேண்டியிருக்கிறதென்றும் ஆனால் ஜாஸ்தி எருவு கிடைக்கிறதில்லை என்றும் உள்நாட்டில் பசும்தழை எருவு உண்டுபண்ண ஸாத்தியப்படவில்லை என்றும் ஷை தாம்ஸன் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார். அவ்வாறே 1922-வருஷத்திலும் கனம் ஜாக்ஸன் ஒப்புக்கொண்டு எழுதியிருப்பதில் தாளடி சாகுபடி நிலத்தில் மிராசுதார் எல்லா எருவையும் உபயோகப்படுத்திவிடுகிறார்கள் என்றும்கண்டு இருக்கிறார். பசும்தழை எருவும் மிகவும் கிராக்கியாக இருக்கிறதென்றும், மணல்பாங்கான பூமியில்மாத்திரம் பயிராக்கக்கூடியதால் கிடைப்பது அரிது என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார். 1913-வருஷத்தில் பூ சார பரிசீலனை செய்தபொழுது 100 பரிசோதன ஸ்தலங்களில் 55-ல்
(Nitrogen) குறைவாக இருந்ததாகவும் 88-ல்
(Phosphate) குறைவாக இருந்ததாகவும்
அக்காரணங்களினால் பூமியின் சாரம் குறைவுபட்டிருக்கிறதென்றும் அதற்கு ஜாஸ்தி எருவு கொடுத்து விருத்திசெய்ய வேண்டுமென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

9. கண்ணம்பாடி தேக்கத்திற்குமுந்தி இவ்வித ஸ்திதி இருக்கும்பக்ஷத்தில் அதற்குப்பிறகு எவ்வளவு கெடுதலான ஸ்திதியில் இந்த ஜில்லா பூஸாரம் இருந்துவரவேண்டுமென்பதைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. வரவர ஜாஸ்தி எருவு கொடுத்தாலொழிய பிரயோஜனப்படமாட்டாது. அப்படி இருக்க இருபோக சாகுபடியால் 15000 ஏகரா குறைந்துபோனது ஆச்சர்யமல்ல. இதல்லாமலும் இப்பொழுது மேட்டூர் தேக்கம் ஏற்பட்டுவந்து ரெகுலேட்டர்கள் ஜாஸ்தியாகி (அணைகள்) விட்டது. இவைகளினால் இன்னும் ஜாஸ்தியாக வண்டல் குறைவு ஏற்பட்டுவிடும். பூமியின்சாரம் க்ஷீணித்துவிடும். எருவு முதலிய சாகுபடி செலவுகள் ஜாஸ்தியாகிவிடும். இப்பேர்ப்பட்ட கெடுதலான நிலைமையில் ஜாஸ்தி தண்ணீர்த்தீர்வை விதிப்பது மிராசுதாரரை அடியோடு கெடுத்துவிடுமேயல்லாது வேறல்ல.

10. ஒருகாலத்திலும் மேட்டூர் தேக்கத்தைக்கொண்டு இருபோக சாகுபடிக்கு ஜாஸ்தி தண்ணீர்த்தீர்வை விதித்து வருமானம்

அதிகரித்துக்கொள்வதான எண்ணமேகிடையாது. புதிதாக சாகு படிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்களிலிருந்துமாத்திரம் வருமானம் பெறுவதாக சர்க்காரில் சொல்லப்பட்டது. தற்கால பாசன வஸதிகளைக் காவந்துசெய்கிறோம் என்று சர்க்காரில் வாக்குறுதிசெய்தார்கள். இந்த ஜில்லாவின் பிரதிநிதிகள் மே. கவர்னர் அவர்களுக்கு 6-1-33-ல் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் மேட்டூர் தேக்கத்தைக்கொண்டு பழய காவேரி பாசனபூமிகளிலிருந்து எவ்விதமான அதிகத் தீர்வையும் வசூல்செய்யக்கூடாதென்று 3, 5, 6, 8 பாராக்களில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. 1834-ம்வருஷத்தில் கனம் காட்டன் பின்வருமாறு சர்க்காருக்கு மேட்டூர் தேக்கத்தைப்பற்றி எழுதி இருக்கிறார்.—சுமார் 75 வருஷங்களாக அதையே நம்பி ஜீவித்துக்கொண்டிருக்கும் ஜனங்களைத் திருப்திசெய்யும்பொருட்டும் தற்காலத்தில் இருந்து உள்ள பாசனவசதிகளைச் சீர்திருத்தும்பொருட்டு புதிதாய் சாகுபடிக்குக் கொண்டுவருவதன்மூலம் அரசாங்கத்துக்கு லாபத்தை உண்டாக்கும்பொருட்டு சீக்கிரமாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கக்கூடும் என்று நம்புகிறோம்.

11. ஏற்கனவே சொன்னபடி தாளடி கீழ்மாரியால் வளர்க்கப்படுகிறது. அதனால் கெடுதியும் அடைகிறது. ஆனால் அக்கெடுதியை நிவர்த்திக்க மேட்டூர் தேக்கம் பிரயோசனப்படமாட்டாது. 1931-ல் வெள்ளத்தை அது தடுக்கவில்லை. இந்த ஜில்லாவின் வெள்ளங்கள் அநேக கீழ்மாரியில் ஏற்பட்டவைகள். மேட்டூர் தேக்கத்திற்கு மேல்வாயில் 16300 சதுரமைல் உள்ள மழையை வாங்கும் விஸ்தீரணம் இருக்கின்றன. மேற்படி விஸ்தீரணம் மேன்மாரி ஜலத்தை வாங்கி அனுப்புகிறது. மேற்படி அணையில் கீழ்வாயில் 10400 சதுரமைல் கீழ்மாரிமழையும் வாங்கும்படியான விஸ்தீரணம் இருக்கிறது. கீழ்மாரி பூராவும் அதில் அடங்கிவிடுகிறது. அப்படிக்கிருக்க கீழ்மாரி ஜலத்தினால் ஏற்படும் வெள்ளத்தை மேட்டூர் தேக்கம் எப்படி தடுக்கக்கூடும்.

12. மேட்டூர் தேக்கத்தினால் நிரந்தரமாயும், அளவாயும் தண்ணீர் கிடைக்கும் என்றும் சர்க்காரில் சொல்லும்பக்ஷத்தில் அதைப் பூராவும் ஒப்புக்கொள்ள நியாயமில்லை. வாஸ்தவம் என்று வைத்துக் கொண்டாலும் தாளடி சாகுபடிக்கு அவ்விதமாய்ப் பாயும் காவேரி தண்ணீரினால்மட்டும் செழிப்பு கிடையாது. முக்கியமாய் கீழ்மாரியின் அனுகூலத்தைப் பொறுத்ததாய் உள்ளது.

13. அப்படிக்கே மேட்டூர் தேக்கம் சகல சௌகரியங்களையும் கொடுக்கும் என்றே வைத்துக்கொண்டு பார்ப்போம். இது நமக்குப் புதிதாய் தயாதாக்ஷண்யமாய் அனுகூலம் செய்ய ஏற்பட்டுள்ளதா? அல்லது சர்க்காரில் ஏற்கனவே செய்திருக்கவேண்டிய கடமையா. சரித்திரங்களைப் பார்க்கும் அளவில் இத்தேக்கம் ஏற்கனவே கண்டிப்பாய் செய்திருக்கவேண்டிய கடமை என்று தெரிகிறது. சற்று கவனிப்போம். 1892-ம் வருஷத்தில் தஞ்சை ஜில்லா கலெக்டர் பின்வருமாறு சென்னைக் கவர்ன்மெண்டுக்கு எழுதியிருக்கிறார். "இந்த ஜில்லாவில் பாசன வசதிகள் சரிவர பராமரிப்பு ஆகவில்லை என்றும் அதற்காக ஏற்பட்டுள்ள திட்டங்கள் ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்றும் இந்த ஜில்லா வாசிகள் பெரும் முறையிடுகிறார்கள். எல்லா இலாகா உத்தியோகஸ்தர்களும் இதை ஒப்புக்கொள்ளவேண்டியதே." அதே வருஷத்தில் சென்னை ரெவின்யூ போர்டாரும் பின்வருமாறு எழுதி இருக்கிறார்கள். "ஏற்கனவே பாசன சம்பந்தமாக ரொம்பவும் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதேமார்க்கத்தில் ஜாஸ்தியாகச் செய்யவேண்டியது பாக்கி இருக்கிறது. இப்பொழுது நாம் பிரரேபித்திருக்கும் ஜாஸ்தி தீர்வையைப் போடும்பக்ஷத்தில் பல லக்ஷக்கணக்காக வருமானம் வரும். இந்த ஜில்லாவின் நிலங்களுக்குத் தண்ணீர் சரிவர கொடுக்கும் விஷயத்தில் ஏராளமாய்ப் பணம்போட்டு சிலவு செய்யவேண்டியது சர்க்காரின் கண்டிப்பான கடமையாகும்."

மராமத்து நீர்ப்பாசன இலாகாவிற்கு மேற்படி விஷயத்தைக் கவனிக்கும்படி அனுப்பப்பட்டது. ஆயினும் சரியானபடி செய்யப்படவில்லை. மிஸ்டர் ஜாக்ஸனும், ஹெமிங்வேயும் இக்காவேரி பாசன பிர்க்காவில் வடிகால் வசதிகளைப் பெருக்க முக்கிய பிரச்னையாக இருந்துவருகிறது என்றும் ஒரு நதி ஒரு இடத்திற்குப் பாசனமாயும், மற்றொரு இடத்திற்கு வடிகாலாயும் இருந்துவருவது முற்றிலும் கெடுதல் என்றும் இவைகளை உடனே கவனிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தி இருக்கிறார்கள்.

14. நமது காவேரி பாசனத்திலிருந்துமாத்திரம் வருஷம் 45 லக்ஷம் ரூ. சர்க்காருக்கு வருமானம் வருகிறது. ஆனால் 100-க்கு 10 வீதம்தான் பாதுகாப்பு சிலவுகள் செய்யப்படுகிறது. கோதாவரியில் 41 லக்ஷமும், கிருஷ்ணாவில் 38 லக்ஷமும் வருமானம் வருகின்றன. அவைகளுக்கு 100-க்கு 23, 20 வீதம் பாதுகாப்பு செலவுகள்

செய்யப்பட்டுவருகின்றது. அல்லாமலும் கிருஷ்ணு, கோதாவரியில் சர்க்காரில் வாய்க்கால்வெட்டு வெட்டுகிறார்கள். நமது ஜில்லாவில் நாம் செலவுசெய்து வெட்டுகிறோம்.

15. இப்படிக்கெல்லாம் சீர்கேடான நிலைமையில் இருந்துவந்தோம். செய்யவேண்டிய பராமரிப்பு காரியங்களை செய்வதாகமட்டும் சர்க்காரில் ஒவ்வொரு பைசலிலும் வாக்களித்தார்கள். ஆனால் அதன்படி செய்யவில்லை. கூக்கூரல் இட்டோம். காவேரி கமிட்டி என்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தினார்கள். அது ஊரு ஊராய்ச் சென்று சாக்ஷிவிசாரணைசெய்து பாசன வடிகால் வசதிகள் பல செய்ய வேண்டுமென்று சிபார்சுசெய்தன. அதுவும் இன்னம் முடிந்தபாடில்லை.

நமது ஜில்லாவிலிருந்து சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் வருமானத்தை அவர்களுடைய வருமானத்தைக்கொண்டு பரிசீலனை செய்வோம். நீர்ப்பாசன வருமானம் ஒரு வருஷத்திற்கு 52,77,208 ரூபாய் என்று 1930-ம் வருஷ ரிபோர்ட்டில் கண்டிருக்கிறார்கள். இதில் 34 லக்ஷம் பழைய பாசனத்தின் வரும்படி என்று அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்கள் சீர்திருத்த வேலைகளினால் உண்டாகிற வரும்படி 18,77,208 ரூபாய். ஆனால் அவர்கள் கணக்குப்படி இதுவரையில் ஆதிகாலமுதல் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சீர்திருத்தத்தின் வேலை 7,09,73,020 ரூபாய்தான். இதுவரையில் 4,35,26,000 ரூபாய் காவேரி பாசன இலாகாவிலிருந்து மிகுதி இலாகாவிலிருந்து லாபம் வந்திருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

இப்படிக்கெல்லாம் இருந்தும் நமக்கு செய்வதாகச் சொன்னதைச் செய்யாமல் அடிக்கடி நமக்கு வெள்ளமும் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. 1900-ம் வருஷம் முதல் 1910-ம் வருஷம் வரையில் மேற்படி நஷ்டத்தை காவேரி கமிட்டியார் கணக்கிட்டிருக்கிறார்கள். அதன்படி $6\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது பத்து வருஷத்திற்கானல் 1892-ம் வருஷம்முதல் நாளது வரையில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளலாம். இவ்விதம் நஷ்டத்திற்கு ஈடுசெய்யக் கடமைப்பட்டிருக்கும்பொழுது சர்க்காரில் தண்ணீர்த் தீர்வையை அதிகப்படுத்துவது பற்றி நாம் கண்டிப்பாய் ஆக்ஷேபிக்கிறோம்.